[2002 மே 7

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 294, திரு. கே.சி. கருப்பணன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.*

294—

மலைப் பாதை

***10080—திரு. கே.சி. கருப்பணன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானி தொகுதியிலுள்ள அரசுக்குச் சொந்தமான ஊராட்சிக்கோட்டை மலைக்கோவிலுக்குச் செல்ல நல்ல பாதை இல்லாததால், மலைப் பாதை எப்பொழுது அமைத்துக் கொடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், ஊராட்சிக்கோட்டை கிராமத்தில் மலைமீது அமைந்துள்ள அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலில் தற்போது மேற்படி கிராம மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சேவா சங்கங்கள் மூலம் பக்தர்கள் சுலபமாக மலைமீது நடக்கும் அளவிற்கு மண்பாதை அமைக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள நிலையில் மேற்படி மலைக்கோயிலுக்குச் செல்ல மலைமீது படிக்கட்டுகள் அமைக்கும் உத்தேசம் அரசளவில் ஏதுமில்லை. மேற்படி திருக்கோயிலுக்குப் பரம்பரை வழிசாரா அறங்காவலர்கள் நியமனம் செய்த பின்பு, திருக்கோயில் நிதி நிலையைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர், சமயப் பெரியோர்கள் ஆகியோரது ஆலோசனைகளின் மீது, அவர்களுடைய நிதியை வைத்து மலைமீது பக்தர்கள் செல்லப் படிக்கட்டுகள் அமைப்பது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. கே.சி. கருப்பணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருக்கோவிலானது 1200 அடி உயரம் கொண்டது. இதன் மேலே உள்ள கோவிலுக்குச் செல்ல பொதுமக்கள் ஒரு சிறிய மண் பாதை அமைத்து அதற்கு வேண்டுகின்ற கல், மணல், சிமெண்ட்

2002 மே 7]

அனைத்தையும் கழுதை மூலமாக மேலே கொண்டு சென்று 35 இலட்ச ரூபாய் செலவிலே இப்போது கோவில் கட்டி குடமுழுக்குச் செய்திருக்கிறார்கள். பாதை அமைப்பதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். இதிலே அம்மாவினுடைய அரசு அனைத்துத் திருக்கோவில்களை பராமரிப்பது போல, இந்தத் திருக்கோவிலுக்கும் பாதை அமைத்துக் கொடுக்க வேண்டுமாய்ப் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருகின்ற கோரிக்கையை நிறைவேற்ற சட்டமன்ற உறுப்பினர், இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய நிதியிலேயிருந்து அவர்கள் நிதி கொடுக்க முன்வருவார்களேயானால், இந்த ஆண்டே அந்தப் பணியைத் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும். பவானி வட்டம், ஊராட்சிக்கோட்டை, அருள்மிகு வேதகிரீஸ்வரர் மற்றும் வரதராஜப் பெருமாள் திருக்கோவில் மலைமீது சுமார் 600 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. இக்கோவில் சட்டப் பிரிவு 46(3)-ன்கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள், படி அமைக்கப்படுமா, அவ்வளவுதான்.

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: யோசிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 295 திரு. சி. சண்முகம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

295—

சோடியம் மின் விளக்கு

***7313—திரு. சி. சண்முகம்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி தேர்வு நிலைப் பேரூராட்சிக்கு சோடியம் மின் விளக்கு அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?